( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023

தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-16


## வினாத்தாள் - I

சுட்டெண்:- ......................................


நேரம் :- 1 மணித்தியாலம்

- பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
  * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.


(01) பின்வரும் A, B, C ஆகிய உருக்கள் வரையப்பட்டுள்ள கோலத்தின்படி, நான்காவது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான உரு





(02) கோலத்திற்கேற்ப அடுத்ததாக வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




(03) வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.





(04) பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.





(1) E, B, D, A, C (2) D, B, E, A, C (3) E, A, B, D, C


(05)




இக்கடதாசிக் கீலத்தை விரிக்கும்போது மடித்த இடங்களைச் சரியாகக் காட்டும் உரு,





(06) நீலாவின் பாடசாலைப் பையைத் தெரிவு செய்க. நீலாவின் பையில்,
- பென்சில் உள்ளது.
- அழிறப்பர் இல்லை.
- பேனை உள்ளது.
- பந்து இல்லை.





(07)





கடதாசித் துண்டு A யில் இருக்கும் குறியீடு  இன் மீது கடதாசித் துண்டு B யில் இருக்கும் குறியீடு  இருக்குமாறு A, B ஆகிய கடதாசித் துண்டுகள் இரண்டையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும்போது காணத்தக்க உரு,




(08)




இவ்வுருவைப் பெற்றுக்கொள்வதற்கு முதலில் பிள்ளையொன்று கீழே தரப்பட்டுள்ள முறைப்படி சதுர வடிவக் கடதாசி ஒன்றை இரண்டு தடவைகள் மடித்தது. அதன் பின் அப்பிள்ளை அதிலிருந்து 3 பகுதிகளை வெட்டி அகற்றியது. (அகற்றப்பட்டுள்ள பகுதிகள் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளன.) அதன்படி, அப்பிள்ளை அகற்றிய 3 பகுதிகளையும் மிகச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.






kalvi.lk

(09)




ஒரு தோட்டத்தில் ஒவ்வொரு வகையிலும் உள்ள மரங்களின் எண்ணிக்கையை இவ்வுரு காட்டுகிறது.

**அம்புக்குறிகள் காட்டும் கருத்து**

**குறைவு ⟶ அதிகம்    அதிகம் ⟵ குறைவு**


அதன்படி, தோட்டத்தில் மிகக் கூடுதலாக உள்ள மரவகை மற்றும் மிகக் குறைவாக உள்ள மரவகை என்பவற்றை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,

(1) மா - கமுகு    (2) பலா - மா    (3) தென்னை - கொய்யா

(10) ஒரு மாதத்தில் புதன்கிழமைகள், வியாழக்கிழமைகள் ஐந்து வீதம் உள்ளன. அதன்படி, அம்மாதமாக இருக்கக்கூடியது,

(1) பெப்ரவரி    (2) ஏப்ரல்    (3) ஆகஸ்ட்


(11)



இவ்வுரு ஒரே சம நீளத்திலான கம்பித் துண்டுகளினால் அமைக்கப்பட்டுள்ளது. இதனை ஒரு முக்கோணமாக மாற்றுவதற்கு இதனுடன் சேர்க்க வேண்டிய ஒரே சம நீளமான கம்பித் துண்டுகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

(1) 8    (2) 6    (3) 7

(12)




இவ்வுருளை வடிவ மரக் கட்டையை முறிந்த கோடுகளின் வழியே சிறிய மரக் குற்றிகளாக வெட்டப்பட்டது. அதன்படி, முறிந்த கோடுகளின் வழியே வெட்டிய பின் கிடைத்த சிறிய கனவுருக்களின் எண்ணிக்கை,

(1) 3    (2) 2    (3) 4

(13) பிழையாக விரித்து எழுதப்பட்டுள்ள எண்ணைத் தெரிவு செய்க.


(1) 4987 = 4000 + 900 + 80 + 7    (2) 7045 = 7000 + 100 + 40 + 5    (3) 8516 = 8000 + 500 + 10 + 6

(14)




இத்திண்மத்தை அம்புக்குறி காட்டும் திசையில் இருந்து நோக்கினால் புலப்படும் முறை,


(1)



(2)



(3)



(15) பின்வரும் குறியீடுகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. அக்குறியீடுகளின் பெறுமதிகள் ஒழுங்குமுறைப்படி எழுதப்படவில்லை.


△ ○ ✳ △ = 2669    ◠ ✳ ○ ✳ = 9392

மேலே, ஒவ்வொரு குறியீட்டினதும் பெறுமதி அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் வரைந்துள்ள விடையைத் தெரிவு செய்க.


(1) ○ ◠ △ ✳    (2) △ ◠ ✳ ○    (3) ◠ ○ ✳ △

(16) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் வளைகோடுகள் மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவு செய்க.


(1)




(2)



(3)



(17)




ஒன்றுடன் ஒன்றை ஒட்டுவதன் மூலம் சதுரமுகியொன்றை அமைத்துக்கொள்வதற்கு இத்தகைய கனவுருக்கள் எத்தனை தேவைப்படும்?

(1) 6    (2) 10    (3) 8

*

| | சிவப்பு | நீலம் | மஞ்சள் | பச்சை |
|---|---|---|---|---|
| மீனா | ✓ | ✗ | ✓ | ✗ |
| சீதா | ✗ | ✓ | ✓ | ✓ |
| பாத்திமா | ✓ | ✓ | ✓ | ✓ |
| பத்மா | ✓ | ✗ | ✓ | ✓ |

பின்வரும் அட்டவணையில் நான்கு பிள்ளைகள் விரும்பும் நிறங்கள் மற்றும் விருப்பமற்ற நிறங்கள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன.

**✓ - விருப்பம்    ✗ - விருப்பமில்லை**

இவ்வட்டவணையை அடிப்படையாகக் கொண்டு (18), (19) ஆகிய வினாக்களுக்குரிய மிகச் சரியான விடைகளைத் தெரிவு செய்க.

(18) அதிக எண்ணிக்கையிலான பிள்ளைகளால் விரும்பப்படும் நிறம்,


(1) மஞ்சள்    (2) சிவப்பு    (3) பச்சை

(19) அதிக எண்ணிக்கையிலான நிறங்களை விரும்பும் பிள்ளை,

(1) சீதா    (2) பாத்திமா    (3) பத்மா

Education கல்வி
kalvi.lk

(20) முதலில் தரப்பட்டுள்ள உருவை A, B, C, D, E ஆகிய உருக்களில் மூன்றைப் பயன்படுத்தி அமைத்துக்கொள்ள முடியும். அதன்படி, அம்மூன்று உருக்களினதும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.




(1) B, D, E
(2) A, B, E
(3) A, C, E


(21) பிள்ளையொன்று 20m வீதம் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு திசைக்கும் பயணித்தது. அப்பிள்ளை பயணித்த திசைகளை ஒழுங்குமுறையாகக் கீழே காட்டப்பட்டுள்ளன.



அதன்படி, அப்பிள்ளை தற்போது இருப்பது பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து,

(1) 20m தென்மேற்குத் திசையில் (2) 20m வடமேற்குத் திசையில் (3) 40m தென்மேற்குத் திசையில்

(22)




இம்மூன்று உருக்களும் வரையப்பட்டுள்ள முறைக்கேற்ப, கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) A, B ஆகிய உருக்கள் பிழையானவை, C உரு சரியானது.
(2) A, C ஆகிய உருக்கள் சரியானவை, B உரு பிழையானது.
(3) A உரு பிழையானது, B, C ஆகிய உருக்கள் சரியானவை.


(23) கீழே தரப்பட்டுள்ள மூன்று சொற்சோடிகளில் இரண்டு சொற்சோடிகள் சமனான தொடர்பைக் கொண்டன. அதன்படி, வித்தியாசமான தொடர்பைக் கொண்ட சொற்சோடியைத் தெரிவு செய்க.

(1) காட்டிற்கு - பறவைகள் (2) பாலைவனத்திற்கு - மணல் (3) கடலிற்கு - நீர்

(24) ஏதோவொரு நிகழ்விற்குக் காரணமல்லாத வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) நன்றாக சிகிச்சை அளித்ததால், நோய் குணமானது. (2) நன்றாக படித்ததால் பரீட்சையில் சித்தியடைந்தனர்.
(3) மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பிதுருதாலகால மலை, இலங்கையின் மிக உயரமான மலையாகும்.

(25)




இக்கடிகார முகத்தில் தற்போதைய நேரம் காட்டப்பட்டுள்ளது. இக்கடிகாரத்தின் நேரம் ஒரு மணித்தியாலத்திற்கு 5 நிமிடங்கள் கூடுதலாக செல்லும். அதன்படி, இரண்டு மணித்தியாலங்களுக்கு முன் இக்கடிகார முகத்தில் காணக்கிடைத்த நேரம்,

(1) 6.15 (2) 6.10 (3) 6.20

(26) ஒரேயளவான நீளத்திலான ஈர்க்குத் துண்டுகளினால் நான் 6 நான்முகிகளை அமைத்தேன். அதே ஈர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தி என்னால் எத்தனை சதுரமுகிகளை அமைக்க முடியும்?

(1) 4 (2) 2 (3) 3

(27) வாங்கியொன்றில் இருவர் அமர்ந்திருந்தனர். ஒருவர் மற்றவரின் தாய் ஆவார். ஆனால் மற்றவர் தாயின் மகன் அல்ல எனின், மற்றவர் அவருக்கு என்ன உறவு?

(1) தங்கை (2) மகள் (3) பாட்டி



(28) குறித்த எண்ணொன்றை 4 ஆல் பெருக்கி, 7 ஐக் கூட்டி வரும் விடையுடன் 3 ஐக் கழித்தால் வரும் விடை 24 எனின், அவ்வெண்,

(1) 5 (2) 6 (3) 8


(29) "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் பழமொழியின் கருத்துக்கு சமனான கருத்தைத் தரும் பழமொழியைத் தெரிவு செய்க.

(1) கடுகு சிறிது காரம் பெரிது. (2) நெருப்பின்றி புகையில்லை. (3) அழுத பிள்ளை பால் குடிக்கும்.




(30) கீழே தரப்பட்டுள்ள வினாவில் மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருச்சோடி அடங்கும் கூட்டைத் தெரிவு செய்க.

(1) 
(2) 
(3) 

(31)




தரப்பட்ட சதுர வடிவக் கடதாசியில் P என்ற எழுத்து மை பூசப்பட்டு புள்ளிக்கோட்டின் வழியே அம்புக்குறி காட்டும் திசைக்கு இரண்டாக மடித்து விரிக்கும்போது காணக்கிடைக்கும் முறை,

(1) 
(2) 
(3) 

kalvi.lk

(32) ஒரு கவிதையின் நான்கு வரிகள் ஒழுங்குமாறி எழுதப்பட்டுள்ள விதம் கீழே காணப்படுகிறது. அவற்றின் சரியான ஒழுங்கைத் தெரிவு செய்க.

A :- தேங்காய் ஒன்று விழுந்தது
B :- தலையைத் திருப்பிப் பார்த்தது
C :- தென்னந் தோப்பு மூலையில்
D :- தூக்கம் கலைந்த நாய்க்குட்டி

(1) A, C, B, D
(2) C, A, D, B
(3) D, A, C, B


(33) பின்வரும் பாடலை வாசித்து வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

வானமீ தெழுவேன் - அங்கே
வட்டம் சுற்றிடுவேன்
கான மலையெல்லாம் - யானோர்
கணத்தில் தாண்டிடுவேன்.

இடைவிடாது தபால் - உலகில்
எங்கும் கொண்டு செல்வேன்
சடைவி லாமலே - பலரைத்
தாங்கியும் போவேன்.


இப்பாடலில் எதைப் பற்றி கூறப்படுகிறது?

(1) புறா (2) சூரியன் (3) ஆகாய விமானம்

(34) 

உருவில் உள்ள திண்மத்தில் இருக்கும் முகங்களின் எண்ணிக்கை,

(1) 8
(2) 7
(3) 9

(35) 

இவ்வுருவில் காணக்கிடைக்கும் வடிவங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 4
(2) 5
(3) 6

(36) 



இக்கடிகார முகத்தில் முற்பகல் நேரம் காட்டப்பட்டுள்ளது. இக்கடிகார முகத்தில் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் ஒன்றன் மீது ஒன்று முதலாவதாக அமைவது,

(1) நண்பகல் 12.00 இற்கு (2) மு.ப 10.00 இற்கும் 11.00 இற்கும் இடையில்
(3) மு.ப 11.00 இற்கும் 12.00 இற்கும் இடையில்

(37) கீழே தரப்பட்டுள்ள பந்தியின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

ஆறு அடிக்கடி வெள்ளம் பெருகும் தன்மையினை உடையது. வெள்ளம் பெருகுகின்ற பொழுது ............ நீர் நிரம்பி மிகவும் விரைவாகச் செல்லும். அப்பொழுது அதன் இருபக்கத்துக் ............ இடிபடுவதுண்டு. அக்கரைகள் அவ்வாறு இடிபடும்பொழுது அவற்றில் உள்ள ............ நிலைகுலைந்து கீழே சாய்ந்து விழும்.

(1) ஆற்றில் / கரைகளும் / மரங்கள்
(2) வாவியில் / வேலிகளும் / விலங்குகள்
(3) வாய்க்காலில் / வீதிகளும் / வீடுகள்

(38) 


கனவுரு வடிவிலான பெட்டியொன்று துணி நாடாவினால் கட்டப்பட்ட முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, அப்பெட்டியை கட்டுவதற்கு தேவைப்பட்ட துணி நாடாவின் குறைந்தபட்ச நீளம்,

(1) 110cm (2) 130cm (3) 170cm

(39) பெட்டியொன்றில் சம நிறையுடைய பப்பாசிப்பழங்கள் இரண்டு வைக்கப்பட்டபோது பெட்டியின் நிறை 1kg 800g ஆகும். அப்பெட்டியினுள் அதே நிறையுடைய மேலும் ஒரு பப்பாசிப்பழம் வைக்கப்பட்ட பின் பெட்டியின் நிறை 2kg 500g ஆகும். அதன்படி, வெற்றுப் பெட்டியின் நிறை,

(1) 400g (2) 500g (3) 600g

(40) | 8 | 3 | 2 | 9 | 6 | 5 | என 6 கார்ட்போர்ட் அட்டைகளின் எண்கள் எழுதப்பட்டுள்ள முறை இங்கு காட்டப்பட்டுள்ளது. அதன்படி, அவற்றில் மூன்று கார்ட்போர்ட் அட்டைகளினால் ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணிற்கும் மூன்று கார்ட்போர்ட் அட்டைகளினால் ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம்,

(1) 713 (2) 659 (3) 751

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-16

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..............................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**

*** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

*** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

மலர்கள் சிதறியதுபோல் நட்சத்திரங்கள் வானில் நிறைந்திருந்தன. அதன் மத்தியில் சந்திரனின் ஒளி பூரணமாக வானை அழகுப்படுத்தியது. சந்திரனின் கதிரொளிபட்டு சமுத்திரம் பளபளத்தது. பெரிய வௌவால் ஒன்று அங்கும் இங்கும் பறந்தது. ஆந்தையின் அலறல் சத்தம் இடையிடையே கேட்டது. சின்னஞ்சிறு மின்மினிப்பூச்சிகள் மின்விளக்கு ஏற்றியதுபோல் ஒளி தந்தன.

(i) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள உவமானம் எது? ..............................

(ii) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழிச் சொல் எது? ..............................

(iii) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழியை எழுதுக. ..............................

(iv) "ஆழி" என்ற பொருளைத் தரும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக. ..............................

(v) இரவில் நடமாடும் விலங்குகள் எவை? ..............................

**(02) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( ✗ ) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) "நடித்தான்" உயர்திணை, ஒருமை, ஆண்பால், இறந்தகால வினைச்சொல்லாகும். ( )

(ii) "விளையாடுகின்றன" அஃறிணை, படர்க்கை, பன்மை, இறந்தகால வினைச்சொல்லாகும். ( )

(iii) "செய்வாய்" உயர்திணை, முன்னிலை, எதிர்கால ஒருமை வினைச்சொல்லாகும். ( )

**(03) கீழே தரப்பட்டுள்ள முகவரியினதும் திகதியினதும் பொருத்தமான இடங்களுக்குரிய நிறுத்தக்குறியீடுகளை இடுக.**

இலக்கம் 60 கண்டி வீதி

புத்தளம்

2023 06 20

**(04) பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) இரட்டைக்கொம்பும் அரவும் கொண்டமைந்த சொல்லொன்றை எழுதுக. ..............................

(ii) கீழ்க்காலும் சுழியும் கொண்டமைந்த சொல்லொன்றை எழுதுக. ..............................

(iii) மடக்கேறும் அரவும் கொண்டமைந்த சொல்லொன்றை எழுதுக. ..............................

**(05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை என்பவற்றின் தொடர்பு சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( ✗ ) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) நண்பா, நீ நற்செயலைச் செய்தாய். ( )

(ii) நெற்பயிரின் நாற்றுக்கள் பச்சைப் பசேல் எனக் காட்சியளித்தது. ( )

(iii) வயலில் புகுந்த யானைகள் பயிரை நாசம் செய்தன. ( )

**(06) பின்வரும் பெண்பால் வாக்கியத்தை ஆண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.**

சிறுமி மேடையில் நடனம் ஆடினாள் :- ..............................

**(07) அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) தரம் ஐந்து மாணவர்களால் அன்னையர் தின .................. ( விலா / விழா / விளா ) ஏற்பாடு செய்யப்பட்டது.

(ii) கிராமப் புறங்களில் வீதிகள் குன்றும் .................. ( குளியுமாக / குழியுமாக / குலியுமாக ) காணப்பட்டன.

(iii) அம்மா சமைத்த மீன் .................. ( குளம்பு / குலம்பு / குழம்பு ) சுவையாக இருந்தது.

kalvi.lk

**(08) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு பழமொழிக்கும் பொருத்தமான கருத்தை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

( திருப்திப்படாத மனம், ஒற்றுமையே பலம், விடாமுயற்சி )

**(i)** அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் :- ....................................................................................

**(ii)** இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை :- ....................................................................................

**(iii)** அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு :- ....................................................................................

**(09) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச் சொல்லை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**(i)** நிலத்தின் கீழ் அமைக்கப்படும் வழி :- ....................................................................................

**(ii)** ஆடு, மாடு மேய்ப்பவன் :- ....................................................................................

**(10) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான விடையைப் பூர்த்தி செய்க.**

**(i)** Is this your pencil ? Yes It's ................................ **(ii)** What's your name? My ................................

**(11) ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

**(i)** Circle :- ............................ **(ii)** Triangle :- ............................ **(iii)** Bathroom :- ............................

**(12) சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.**

**(i)**  :- ( trane / train / trein )

**(ii)**  :- ( shoos / shose / shoes )

**(13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

கை கழுவுங்கள் :- ....................................................................................


**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

ஓபே அய்யா கவுத? :- ....................................................................................

(15) **(i)** 75080 இவ்வெண்ணை எழுத்தில் எழுதுக. ....................................................................................

**(ii)** பொது வித்தியாசம் 7 ஆகவுள்ள எண் கோலமொன்றை எழுதுக. ....................................................................................


(16)




இவ்விரு எண்சட்டங்களும் காட்டும் எண்களின் கூட்டுத்தொகையை எழுத்தில் எழுதுக. ....................................................................................


(17)

**A** 23:30

**B** 



A கடிகாரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு பின்னரான நேரத்தை B கடிகாரத்தில் வரைந்துக் காட்டுக. (மணித்தியால முள், நிமிட முள் என்பவற்றை மிகத் தெளிவாக வரைக.)

(18)



இக்கூட்டினுள் காணக்கிடைக்கும் நாக மலர்களின் எண்ணிக்கையை உரோம எண்குறிகளில் எழுதுக. ....................................................................................


(19)



**A** **B**

இத்தராசு சமநிலையானது. இத்தராசின் A மற்றும் B பக்கங்களிலுள்ள படிக்கற்களின் மொத்த நிறை 7kg 600g ஆகும். அதன்படி, A பக்கத்திலுள்ள படிக்கல்லின் நிறை யாது? ....................

(20)



இத்திண்மத்திலுள்ள,

**(i)** முகங்களின் எண்ணிக்கை யாது? .................. **(ii)** விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..................


**(iii)** உச்சிகளின் எண்ணிக்கை யாது? ....................................................

(21)

| | | | | |
|---|---|---|---|---|
| XVII | XVI | IX | XIV | XII |
| XX | XV | XIX | | |

இக்கூட்டினுள் உள்ள உரோம எண்குறிகளில் 2 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண்களை மாத்திரம் தெரிவுசெய்து எழுதுக. ....................................................................................

(22)




குமார், ரவி, நாதன், சிவா எனும் நான்கு பிள்ளைகள் சதுர வடிவமொன்றின் மீது நின்றுகொண்டிருக்கும் முறையை இவ்வுரு காட்டுகின்றது. சிவாவிற்கு நாதனைத் தென்படுவது மேற்குத் திசையிலாகும். அதன்படி, ரவியிற்கு நாதனைத் தென்படுவது எத்திசையிலாகும்? ....................................................................................

kalvi.lk

சுட்டெண்:-..........................................

(23) பின்வரும் அட்டவணையின் இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான எண்களை இலக்கங்களில் எழுதுக.

| முந்திய எண் | எண் | பிந்திய எண் |
|---|---|---|
| .............................................. | நாற்பத்தி ஒன்பதாயிரத்து தொண்ணூற்று ஒன்பது | .............................................. |

(24) பரானாவிடம் 60 ரூபாய் 25 சதம் உள்ளது. அவள் அதில் 24 ரூபாய் 75 சதத்தைச் செலவழித்தாள் எனின், இப்போது அவளிடம் எவ்வளவு பணம் மீதியாக உள்ளது? ..................................................


(25) மாலா பாடசாலைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து 2km 700m தூரம் சைக்கிளிலும், 10km 600m தூரம் பேருந்திலும் பயணித்துப் பாடசாலைக்கு வருகின்றாள். அதன்படி, மாலாவின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் யாது? ..............

(26) மு.ப 10.40 இற்குப் புறப்பட்ட ஒரு பேருந்து 3 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களுக்குப் பின்னர் அநுராதபுரத்தை அடைந்தது. பேருந்து அநுராதபுரத்தை அடைந்த நேரம் யாது? ..........................................................................................

(27) நான்கு பிள்ளைகள் வீதம் இருக்கும் 27 குழுக்கள் உள்ளன. அதே பிள்ளைகளை 6 பிள்ளைகள் வீதம் இருக்கும் குழுக்களாக்கினால் கிடைக்கும் குழுக்களின் எண்ணிக்கை யாது? ..................................................

(28) பூசணி ஒன்றின் நிறை 4kg 600g ஆகும். அத்தகைய 4 பூசணிகளின் மொத்த நிறை எவ்வளவு? ...............................

(29)



இவ்வுருவின் உள்ளே காணக்கிடைக்கும்,

(i) செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ..............................................

(ii) செங்கோணத்திலும் சிறிய கோணங்களின் எண்ணிக்கை யாது? ................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) "பிரெயில் முறையில்" எழுத்துக்களை வாசிப்பவர்கள்,
(1) ஊமைகள் (2) நடமாட முடியாதவர்கள் (3) கண் பார்வையற்றவர்கள்

(31) தண்டில் பூக்கள் பூக்கும் தாவரம்,
(1) நாகலிங்கம் (2) நாக மரம் (3) கொன்றை

(32) கண்ணுக்குப் புலப்படாத மிகச் சிறிய பொருளொன்றைப் பெரிதுபடுத்திப் பார்ப்பதற்கு பயன்படுத்தும் உபகரணம்,
(1) தொலைக்காட்டி (2) ஊசித்துளைக் கமரா (3) நுணுக்குக்காட்டி

(33) பாதங்களில் குளம்புகளைக் கொண்ட பிராணிகள்,
(1) மாடு, குதிரை (2) குரங்கு, பூனை (3) முயல், புலி

(34) மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் ஆபிரிக்க நாடுகளுக்கு எத்திசையில் அமைந்துள்ளது,
(1) மேற்குத் திசையில் (2) கிழக்குத் திசையில் (3) தெற்குத் திசையில்

(35) "கண்டங்கத்தரி" தாவரத்தின் இலைகளைக் காட்டும் உரு,
(1)  (2)  (3) 

(36) நீரில் வளரும் தாவரங்கள் அல்லாதது,
(1) ஆகாயத்தாமரை, ஐதரில்லா (2) வலிசினேசியா, தாமரை (3) மாதுளை, இலுப்பை

(37) புளிப்புச் சுவையுள்ள பழங்களில் இருந்து எமக்குக் கிடைப்பது,
(1) உயிர்ச்சத்து C (2) உயிர்ச்சத்து B (3) உயிர்ச்சத்து A

(38) ஔடதப் பானமொன்றைத் தயாரிக்கப் பயன்படுத்தும் செடி வகை,
(1) குப்பைமேனி (2) தேங்காய்ப்பூக்கீரை (3) சீதேவியார் செங்கழுநீர்

(39) 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது,
(1) ஆங்கிலேயரிடமிருந்து (2) போர்த்துக்கேயரிடமிருந்து (3) ஒல்லாந்தரிடமிருந்து

(40) கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் ஓர் ஓவரில் வீசப்படும் பந்துகளின் எண்ணிக்கை,
(1) 5 (2) 7 (3) 6

(41) பந்து பயன்படுத்தப்படாத விளையாட்டு,
(1) பூப்பந்து (2) மேசைப்பந்து (3) றகர்

(42) தனது குட்டியை வயிற்றில் சுமந்துக் கொண்டு பறப்பது,
(1) ஆந்தை (2) வௌவால் (3) கொக்கு

(43) வித்துக்கள் ஒரு கோலத்திற்கேற்ப அமைந்திருக்கும் காய்,
(1) பூசணி (2) கொய்யா (3) கெக்கரி

(44) வேர்களினால் மட்டும் புதிய கன்றுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தாவரம்,
(1) கரும்பு (2) ஈரப்பலா (3) கமுகு

kalvi.lk

(45) துளசி இலைகளை எரித்துப் புகையூட்டல் செய்வது,
(1) வீட்டு ஈக்களை விரட்டுவதற்காகும். (2) எலிகளை விரட்டுவதற்காகும். (3) நுளம்புகளை விரட்டுவதற்காகும்.

(46) களனிப் பள்ளத்தாக்குப் புகையிரதப் பாதை எனக் கூறப்படுவது,
(1) கொழும்பிலிருந்து அவிசாவளை புகையிரதப் பாதை (2) கொழும்பிலிருந்து மாத்தறை புகையிரதப் பாதை
(3) கொழும்பிலிருந்து மட்டக்களப்பு புகையிரதப் பாதை

(47) அயடீன் அதிகளவில் அடங்கியுள்ள உணவு வகை,
(1) மீன், இறைச்சி (2) கடல் மீன், கருவாடு (3) நிலக்கடலை, மாஜரீன்

(48) இலங்கை அமைந்துள்ளது,
(1) ஆசியாக் கண்டத்தில் (2) ஆபிரிக்காக் கண்டத்தில் (3) ஐரோப்பியாக் கண்டத்தில்

(49) சந்திர கிரகணம் நிகழும் சந்தர்ப்பத்தில்,
(1) சூரியன் மற்றும் புவிக்கு இடையில் சந்திரன் அமைந்திருக்கும்.
(2) புவி மற்றும் சந்திரனுக்கு இடையில் சூரியன் அமைந்திருக்கும்.
(3) சூரியன் மற்றும் சந்திரனுக்கு இடையில் புவி அமைந்திருக்கும்.

(50) புவி தன்னைத்தானே சுற்றி வருவதற்கு எடுக்கும் காலம்,
(1) ஒரு வருடம் (2) ஒரு நாள் (3) ஒரு மாதம்


(51) கீழே தரப்பட்டுள்ள சமயப் பண்டிகைகள் கொண்டாடப்படும் மாதங்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,



**தைப்பொங்கல், வெசாக், நத்தார்**

(1) ஜனவரி - மே - டிசம்பர் (2) மார்ச் - ஜூன் - ஒக்டோபர் (3) மே - ஜனவரி - டிசம்பர்

(52) A  B 
A, B ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ள பூக்களின் பெயர்கள்,
(1) A - நீலோற்பலம், B - அலரி (2) A - செவ்வரத்தை, B - பூசணி
(3) A - நாகலிங்கம், B - நந்தியாவட்டை

(53) சூரிய ஒளியில் இருந்து நெருப்பை பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்,
(1) முகம் பார்க்கும் கண்ணாடி (2) கைவில்லை (3) தொலைக்காட்டி

(54) 
இவ்வுருவினால் காட்டப்படும் உடுத்தொகுதி,
(1) தென்சிலுவை (2) வேட்டைக்காரன் (3) பெருநாய்

(55) 
உரு A

உரு B

பிரதான வீதிகளிலுள்ள ஒளிச் சமிக்ஞைத் தூண்களில் இவ்வுருக்கள் காணக்கிடைக்கும். இங்கு A, B என்பவற்றின் நிறங்களை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,
(1) A - மஞ்சள், B - பச்சை (2) A - பச்சை, B - சிவப்பு
(3) A - சிவப்பு, B - பச்சை


(56) 
இவ்வுரு இலங்கை சுதந்திரப் போராட்டத்தின் பிரதான தளபதியொருவரைக் காட்டுகிறது. அவரது பெயர்,
(1) கொங்காலேகொட பண்டா (2) மொனரவில கெப்பெட்டிப்பொல திசாவை
(3) டீ. எஸ். சேனாநாயக்கா

(57) 
உரு A

உரு B

A, B ஆகிய உருக்களினால் காணக்கிடைக்கும் செயற்பாடுகளை ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,
(1) மயிர்க்கொட்டி போன்று செல்லல், தவளைப் போன்று பாய்ந்து பாய்ந்து செல்லல்.
(2) நண்டு போன்று நடந்து செல்லல், வீல்பரோ பயணம்.
(3) யானைப்போல் பயணித்தல், முயல் போன்று பாய்ந்து பாய்ந்து செல்லல்.

(58) 'முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை ஒன்று உண்டு' என்பதைத் தெரிவிக்கும் வீதிச் சமிக்ஞை,
(1)  (2)  (3) 

(59) 
இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள விளையாட்டு,
(1) கோலூன்றிப் பாய்தல் (2) ஈட்டி எறிதல் (3) உயரம் பாய்தல்

**(60) "மனிதனுக்கு நோய் நொடிகளைப் பரப்பும் நுளம்பு நானாவேன்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

(3) ..............................................................................................................................

kalvi.lk